ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ மாதவத்தோன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாதவத்தோன் ॥

## திருவரங்கத் திருப்பதி

‡மா தவத்தோன் புத்திரன் போய்⋆ மறிகடல்வாய் மாண்டானை⋆
ஓதுவித்த தக்கணையா⋆ உருவுருவே கொடுத்தான் ஊர்⋆
தோதவத்தித் தூய் மறையோர்⋆ துறைபடியத் துளும்பி எங்கும்⋆
போதில் வைத்த தேன் சொரியும்⋆ புனல் அரங்கம் என்பதுவே (1)

பிறப்பகத்தே மாண்டொழிந்த⋆
பிள்ளைகளை நால்வரையும்⋆
இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து⋆
ஒருப்படித்த உறைப்பன் ஊர்⋆
மறைப் பெருந் தீ வளர்த்திருப்பார்⋆
வருவிருந்தை அளித்திருப்பார்⋆
சிறப்புடைய மறையவர் வாழ்⋆
திருவரங்கம் என்பதுவே (2)

மருமகன் தன் சந்ததியை⋆ உயிர்மீட்டு மைத்துனன்மார்⋆
உருமகத்தே வீழாமே⋆ குருமுகமாய்க் காத்தான் ஊர்⋆
திருமுகமாய்ச் செங்கமலம்⋆ திருநிறமாய்க் கருங்குவளை⋆
பொரு முகமாய் நின்றலரும்⋆ புனல் அரங்கம் என்பதுவே (3)

கூன் தொழுத்தை சிதகுரைப்பக்⋆
கொடியவள் வாய்க் கடியசொல் கேட்டு⋆
ஈன்றெடுத்த தாயரையும்⋆
இராச்சியமும் ஆங்கொழிய⋆
கான் தொடுத்த நெறி போகிக்⋆
கண்டகரைக் களைந்தான் ஊர்⋆
தேன் தொடுத்த மலர்ச் சோலைத்⋆
திருவரங்கம் என்பதுவே (4)

பெருவரங்கள் அவை பற்றிப்⋆ பிழக்குடைய இராவணனை⋆
உருவரங்கப் பொருதழித்து⋆ இவ்வுலகினைக் கண்பெறுத்தான் ஊர்⋆
குரவரும்பக் கோங்கலரக்⋆ குயில் கூவும் குளிர் பொழில் சூழ்⋆
திருவரங்கம் என்பதுவே⋆ என் திருமால் சேர்விடமே (5)

கீழ் உலகில் அசுரர்களைக்⋆ கிழங்கிருந்து கிளராமே⋆
ஆழிவிடுத்தவருடைய⋆ கருவழித்த அழிப்பன் ஊர்⋆
தாழை மடல் ஊடுரிஞ்சித்⋆ தவள வண்ணப் பொடி அணிந்து⋆
யாழின் இசை வண்டினங்கள்⋆ ஆளம் வைக்கும் அரங்கமே (6)

கொழுப்புடைய செழுங்குருதி⋆ கொழித்திழிந்து குமிழ்த்தெறிய⋆
பிழக்குடைய அசுரர்களைப்⋆ பிணம் படுத்த பெருமான் ஊர்⋆
தழுப்பரிய சந்தனங்கள்⋆ தடவரை வாய் ஈர்த்துக் கொண்டு⋆
தெழிப் புடைய காவிரி வந்து⋆ அடிதொழும் சீர் அரங்கமே (7)

வல் எயிற்றுக் கேழலுமாய்⋆ வாள் எயிற்றுச் சீயமுமாய்⋆
எல்லை இல்லாத் தரணியையும்⋆ அவுணனையும் இடந்தான் ஊர்⋆
எல்லியம் போதிருஞ்சிறை வண்டு⋆ எம்பெருமான் குணம் பாடி⋆
மல்லிகை வெண்சங்கூதும்⋆ மதில் அரங்கம் என்பதுவே (8)

குன்றாடு கொழு முகில் போல்⋆
குவளைகள் போல் குரை கடல் போல்⋆
நின்றாடு கணமயில் போல்⋆
நிறம் உடைய நெடுமால் ஊர்⋆
குன்றூடு பொழில் நுழைந்து⋆
கொடி இடையார் முலை அணவி⋆
மன்றூடு தென்றல் உலாம்⋆
மதில் அரங்கம் என்பதுவே (9)

‡பரு வரங்கள் அவைபற்றிப்⋆ படையாலித்தெழுந்தானைச்⋆
செருவரங்கப் பொருதழித்த⋆ திருவாளன் திருப்பதி மேல்⋆
திருவரங்கத் தமிழ் மாலை⋆ விட்டுசித்தன் விரித்தன கொண்டு⋆
இருவர் அங்கம் எரித்தானை⋆ ஏத்த வல்லார் அடியோமே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥